**செ.கு.எண்.92** **நாள்: 16.6.2007**

பத்திரிகை செய்தி

குடும்ப அட்டை புதிய கணக்கெடுப்பு மற்றும் குடும்ப அட்டைகளை முறைப்படுத்துதல்

மாநகராட்சி பகுதிகளில் புதிய கணக்கெடுப்பு நடத்தி புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் தொடர்பாக 16.06.2007 அன்று நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள கூட்டரங்கில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை தாங்கி, புதிய கணக்கெடுப்பு நடத்த வேண்டியதன் அவசியத்தையும், அதனை சிறப்பாக செயல்படுத்த வணக்கத்திற்குரிய மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் சிறந்த ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். மேலும், கணக்கெடுப்பு எவ்வித தவறுகளுமின்றி எடுக்கப்பட்டு, தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டை முறையாக வழங்கிட உரிய நடவடிக்கையை உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

சென்னை, கோவை, திருச்சி மற்றும் சேலம் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், அரசு செயலாளர்கள், மாநகராட்சி ஆணையர்கள், சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்கள்

கலந்து கொண்டனர். திருச்சி, சேலம், கோவை மாவட்ட ஆட்சியர்களும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும், இந்த கூட்டத்தில் ஆணையர், குடிமைப் பொருள் வழங்கல் துறை, பதிவாளர், கூட்டுறவுத் துறை, பள்ளிக் கல்வித் துறை செயலாளர், இயக்குநர்கள் ஆகியோரும் பங்கேற்றனர்.

மாநகராட்சிப் பகுதிகளில் புதிய கணக்கெடுப்பு நடத்தி, புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

புதிய கணக்கெடுப்பின் அவசியம் மற்றும் புதிய கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ள விதம் குறித்து முதன்மை ஆணையாளர் மற்றும் ஆணையர் அவர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

புதிய கணக்கெடுப்பு பணியில் உள்ளாட்சித் துறையின் மக்கள் பிரதிநிதிகள், அலுவலர்கள் பங்கு குறித்தும், கல்வித் துறையின் சார்பாக, ஆரம்ப, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களை கணக்கெடுப்பில் ஈடுபடுத்துவது குறித்தும், மாவட்ட அளவில் குடும்ப அட்டைகள் அச்சடிக்கப்படவுள்ளது குறித்தும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

**************

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.